**தலைப்பு 110 - நீதி அமைச்சு மற்றும் அந்த அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள் தொடர்பான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை – 2014 ஆம் ஆண்டு**

---

இந்த அறிக்கையின் 1 ஆம் பந்தி முதல் 2 ஆம் பந்தி வரை அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள திணைக்களங்களின் கணக்குகள் தொடர்பான பொதுத் தகவல்கள் உள்ளடக்கப்பட்டிருந்ததுடன் 3 ஆம் பந்தி முதல் ஒவ்வொரு தலைப்பிற்குமான கணக்காய்வு அவதானிப்புக்கள் காண்பிக்கப்படுகின்றன.

## 1. அமைச்சின் கீழுள்ள திணைக்களங்கள்

| தலைப்பு | திணைக்களம் |
|---|---|
| 228 | நீதிமன்ற நிருவாகம் |
| 231 | கடன் இணக்க சபை திணைக்களம் |
| 233 | அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் |
| 234 | உயர் நீதிமன்ற பதிவாளர் |
| 235 | சட்ட ஆணைக்குழு திணைக்களம் |

### 1.1 கணக்காய்வின் நோக்கெல்லை

மேற்கூறப்பட்ட 1 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட நீதி அமைச்சினதும் திணைக்களங்களினதும் 2014 திசெம்பர் 31 இல் முடிவுற்ற ஆண்டிற்கான நிதி அறிக்கைகள், இணக்கக்கூற்றுக்கள் பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் ஏனைய அறிக்கைகள் உள்ளடக்கப்பட்ட ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் வருமானக் கணக்கு என்பன இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளின் பிரகாரம் கணக்காய்வு செய்யப்பட்டன. மீளாய்வாண்டிற்கான முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை கீழே குறிப்பிடப்படும் திகதிகளில் அமைச்சு மற்றும் திணைக்களங்களின் பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தருக்கும் கணக்கீட்டு உத்தியோகத்தர்களுக்கும் வழங்கப்பட்டது. கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் கருத்துரைகள் மற்றும் கண்டுபிடிப்புக்கள் என்பன கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான மீளாய்வு, கொடுக்கல் வாங்கல்கள் மாதிரிகளது போதியளவான செவ்வை பார்த்தல்கள் என்பவற்றின் அடிப்படையில் எழுந்தனவேயாகும்.

அவ்வாறான மீளாய்வினதும், செவ்வை பார்த்தலினதும் நோக்கெல்லையும் பரப்பும் என்னால் பெற்றுக்கொள்ளக் கூடியதாகவிருந்த பதவியணியினர், ஏனைய வளங்கள், காலம் என்பவற்றின் வரையறைக்குட்பட்டு இயலுமான அளவில் விரிவானதோர் கணக்காய்வு ஒன்றினை மேற்கொள்ளக்கூடிய முறையில் தயாரிக்கப்பட்டதாகும்.

| **தலைப்பு** | **அமைச்சு / திணைக்களம்** | **முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கை வழங்கப்பட்ட திகதி** |
|---|---|---|
| 110 | நீதி அமைச்சு | 2015 யூலை 27 |
| 228 | நீதிமன்ற நிருவாகத் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 13 |
| 231 | கடன் இணக்க சபை திணைக்களம் | 2015 யூன் 26 |
| 233 | அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் | 2015 யூலை 10 |
| 234 | உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களம் | 2015 ஆகஸ்ட் 13 |
| 235 | சட்ட ஆணைக்குழு திணைக்களம் | 2015 யூலை 03 |

## 1.2 கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்புக்கள்

ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 148, 149, 150 மற்றும் 152 ஆம் உறுப்புரைகள், ஏனைய சட்டரீதியான ஏற்பாடுகள், அரசாங்க நிதி மற்றும் நிர்வாகப் பிரமாணங்களுக்கு இணங்க பராமரித்துச் செல்லல், தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தல் என்பன பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் கணக்கீட்டு உத்தியோகத்தரினதும் பொறுப்பாகும். மோசடிகள் அல்லது தவறுகள் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்ற கணக்குகள் மற்றும் இணக்கக் கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயபூர்வமானதாக சமர்ப்பிப்பதற்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளைத் திட்டமிடல், செயற்படுத்தல் மற்றும் பராமரித்துச் செல்லல் என்பன இப்பொறுப்பில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

## 2. கணக்குகள்

### 2.1 ஓதுக்கீட்டுக் கணக்கு

#### (அ) மொத்த ஏற்பாடும் செலவும்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 05 திணைக்களங்களுக்காக செய்யப்பட்டிருந்த மொத்த தேறிய ஏற்பாடு ரூபா 6,310,348,000 ஆக இருந்ததுடன் இதில் மீளாய்வாண்டின் இறுதிவரையில் ரூபா 5,966,340,291 தொகை பயன்படுத்தப்பட்டிருந்தது. இதன் பிரகாரம், அமைச்சினதும் ஒவ்வொரு திணைக்களங்களினதும் தேறிய ஏற்பாடுகளிலிருந்தான சேமிப்புக்கள் ரூபா 1,951,727 முதல் ரூபா 171,338,607 வரையிலான வீச்சில் அதாவது தேறிய ஏற்பாட்டில் 3.36 சதவீதத்திலிருந்து 25.16 சதவீதம் வரையான வீச்சில் காணப்பட்டது. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| தலைப்பு | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறானது | | | தேறிய ஏற்பாட்டின் சதவீதமாக சேமிப்புக்கள் |
|---|---|---|---|---|
| | தேறிய ஏற்பாடு | பயன்பாடு | சேமிப்பு | |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | |
| 110 | 753.34 | 647.46 | 105.88 | 14.05 |
| 228 | 5,102.45 | 4,931.11 | 171.34 | 3.36 |
| 231 | 10.97 | 9.02 | 1.95 | 17.78 |
| 233 | 301.48 | 261.85 | 39.63 | 13.15 |
| 234 | 126.41 | 105.15 | 21.26 | 16.82 |
| 235 | 15.70 | 11.75 | 3.95 | 25.16 |
| மொத்தம் | **6,310.35** | **5,966.34** | **344.01** | **5.45** |

**2.2 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள்**

**பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட எல்லைகள்**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 05 திணைக்களங்களிற்கான அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகளுக்காக பாராளுமன்றத்தால் அனுமதிக்கப்பட்ட பின்வரும் எல்லைகள் மற்றும் உள்ளபடியான பெறுமதிகள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| விடய இல. | செலவினம் | | பெறுவனவுகள் | | வரவு மீதி | |
|---|---|---|---|---|---|---|
| | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது | ஆகக் குறைந்த எல்லை | உள்ளபடியானது | ஆகக் கூடிய எல்லை | உள்ளபடியானது |
| | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் | ரூபா. மில்லியன் |
| 11001 | 10.00 | 9.98 | 5.50 | 7.49 | 52.00 | 36.07 |
| 22801 | 290.42 | 290.18 | 175.00 | 205.39 | 1,100.00 | 772.75 |
| 23101 | 1.00 | 0.85 | 0.20 | 0.35 | 3.50 | 1.59 |
| 23301 | 6.50 | 6.28 | 3.20 | 4.41 | 30.00 | 21.03 |
| 23401 | 13.00 | 10.04 | 5.00 | 8.36 | 45.00 | 31.56 |
| 23501 | 1.20 | 0.87 | 0.20 | 0.39 | 4.50 | 2.39 |

**2.3 கட்டுநிதிக் கணக்கு**

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 04 திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான கட்டுநிதி மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 298,377,307 ஆக இருந்தது. அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களத்தில் அத்திகதியில் கட்டுநிதிக் கணக்கில் மீதியொன்று காணப்படவில்லை. விபரம் கீழே காண்பிக்கப்படுகின்றது.

| அமைச்சு/ திணைக்களங்கள் | கட்டுநிதிக் கணக்கு இல | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| நீதி அமைச்சு | 7002/0000/00/0077/0014/000 | 36.775 |
| நீதிமன்ற நிருவாகத் திணைக்களம் | 7002/0000/00/0328/0014/000 | 243.987 |
| கடன் இணக்க சபை | 7002/0000/00/0281/0014/000 | 0.383 |

| | | |
|---|---|---|
| திணைக்களம் | | |
| உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களம் | 7002/0000/00/0140/0013/000 | 15.450 |
| சட்ட ஆணைக்குழு திணைக்களம் | 7002/0000/00/0320/0014/000 | 1.782 |
| | | ------------ |
| மொத்தம் | | **298.377** |
| | | ====== |

## 2.4 பொது வைப்புக் கணக்குகள்

அமைச்சு மற்றும் அமைச்சின் கீழுள்ள 03 திணைக்களங்களின் 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பொது வைப்புக் கணக்கு மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 7,626,736,470 இருந்தது. விபரங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

| அமைச்சு/ திணைக்களம் | வைப்புக் கணக்கு இல. | 2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான மீதி |
|---|---|---|
| | | ரூபா. மில்லியன் |
| நீதி அமைச்சு | 6000/0000/00/0015/0023/000 | 3.727 |
| நீதிமன்ற நிருவாகம் | 6000/0000/00/0015/0109/000 | 7,532.190 |
| அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம் | 6000/0000/00/0015/0113/000 | 5.207 |
| உயர் நீதிமன்ற பதிவாளர் திணைக்களம் | 6000/0000/00/0015/0114/000 | 85.612 |
| | | ------------ |
| மொத்தம் | | **7,626.736** |
| | | ======= |

## 2.5 கணக்காய்வு அவதானிப்புகள்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதியறிக்கைகள் மற்றும் புத்தகங்களின் பிரகாரம், நீதி அமைச்சு மற்றும் அதன் கீழுள்ள திணைக்களங்களின் ஒதுக்கீட்டுக் கணக்கு மற்றும் இணக்கக் கூற்றுக்கள் தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள் 1.1 ஆம் பந்தியில் காண்பிக்கப்பட்ட பிரகாரம் முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட அவதானிப்புக்களுக்கு உட்பட்டு திருப்திகரமாகத் தயாரிக்கப்பட்டிருந்தது. அந்த முகாமைத்துவ கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட அவதானிப்புக்களில் பொருண்மையானதும் முக்கியத்துவமானதுமான அவதானிப்புக்கள் 3 முதல் 8 வரையான பந்திகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## 3. தலைப்பு 110 – நீதி அமைச்சு

### 3.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (அ) | வாகனப் பட்டியல் பதிவேடு | நிதிப்பிரமாணம் 1647(உ) |
| (ஆ) | இழப்பு தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

### 3.2 நிதியேற்பாட்டை விஞ்சி பொறுப்புக்கள் ஏற்படுத்தப்பட்டமை

07 செலவின வருடங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 27,644,470 தொகையான நிதி ஏற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பை விஞ்சி ரூபா 910,141 தொகையான பொறுப்புக்கள் ஏற்பட்டிருந்தது.

### 3.3 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 02 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,500,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 13 செலவின விடயங்களுக்காக ரூபா 147,898,204 மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 28 சதவீதம் முதல் 77 சதவீதம் வரையிலான அளவினைக் கொண்டிருந்தது.

### 3.4 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களை விஞ்சிய ரூபா 992,574 கூட்டுத்தொகையான வைப்புக்கள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பான இணக்கக்கூற்று

11001 ஆம் விடய இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றின் படி அத்திகதியில் உள்ளவாறு நிலுவையாக இருந்த மீதிகளின் கூட்டுத்தொகை ரூபா 927,648 ஆக இருந்ததுடன் அந்த நிலுவை மீதிகள் 01 முதல் 03 வருடங்கள் வரையிலான காலத்திலிருந்து கொண்டுவரப்பட்டிருந்தது. அந்த நிலுவை மீதிகளை அறவீடு செய்யும் பின்தொடர் நடவடிக்கைகள் நலிவான நிலையில் காணப்பட்டது.

## 3.6 சொத்துக்களின் முகாமைத்துவம்

### வருடாந்த பொருள் மெய்மையாய்வை நடாத்துதல்

2014 ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி 2014 இன் வருடாந்த பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 மார்ச் 17 ஆந் திகதிக்கு முன்னர் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டியிருந்த போதிலும் அமைச்சிற்குரிய நிதிமன்றங்களில்லாத உத்தியோகத்தர்களுக்கு பயிற்சியளிக்கும் நிறுவனம், றக்வான மற்றும் நுவரெலியா சுற்றுலா விடுதிகளின் 2014 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கை 2015 யூலை 09 ஆந் திகதி வரையிலும் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.7 சிக்கனமற்ற கொடுக்கல் வாங்கல்கள்

அமைச்சு, அரசாங்க நிறுவனமொன்றுடன் 2012 நவம்பர் 29 ஆந் திகதி உடன்படிக்கையில் கைச்சாத்திட்டதன் பின்னர் சர்வதேச தீர்ப்பனவு நிலையத்திற்காக உலக வர்த்தக நிலையத்தின் மாடியொன்றை வாடகைக்குப் பெற்றிருந்தது. அந்த மாடிக்காக 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதியில் ரூபா 68.9 மில்லியன் வாடகைப் பணம் செலுத்தப்பட்டிருந்தது. அந்த நிலையம் 2015 யூன் மாதத்தின் போது திறக்கப்பட்டிருந்த போதிலும் அத் திகதி வரையிலும் அந்த நிலையத்தில் எந்த வித தீர்ப்பனவு செயற்பாடுகளும் நிறைவேற்றப்பட்டிருக்கவில்லை. 2013 ஆம் ஆண்டு முதல் அந்த கட்டிடத்தின் மாடி எந்தச் செயற்பாடுகளுக்கும் பயன்பாட்டிற்கு எடுக்கப்படாமையினால் செலுத்தப்பட்ட மொத்தக் கட்டிட வாடகையும் பயனற்றதாக இருந்தது.

## 3.8 முகாமைத்துவ நலிவுகள்

2015 மார்ச் 16 ஆந் திகதி மற்றும் 2015 யூன் 23 ஆந் திகதிகளில் முறையே சொத்துக்களின் முகாமைத்துவம் தொடர்பாகவும் வெளித் தரப்பினருக்கும் வழங்கப்பட்டுள்ள சொத்துக்கள் மற்றும் அமைச்சு பெற்றிருந்த ஏனைய தரப்பினருக்குச் சொந்தமான சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் கண்காய்விற்குக் கோரப்பட்டிருந்த போதிலும் 2015 ஆகஸ்ட் மாதம் வரையிலும் அந்த தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 3.9 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 35 | 29 | 06 |
| (ii) | மூன்றாம் நிலை | 11 | 09 | 02 |
| (iii) | இரண்டாம் நிலை | 176 | 138 | 38 |
| (iv) | ஆரம்ப நிலை | 113 | 72 | 41 |
| (v) | ஏனையோர் (ஒப்பந்த அடிப்படை) | - | 03 | - |
| | மொத்தம் | **335** | **251** | **87** |

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 87 வெற்றிடங்கள் நிரப்புவதற்கு அமைச்சு நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 4. தலைப்பு 228 - நீதிமன்ற நிருவாகம்

### 4.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தால் நிதிப்பிரமாணம் 1647(உ) பிரிவின்படி வாகனங்கள் தொடர்பான பதிவேடு நாளதுவரையாக்கப்பட்டிருக்கவில்லை.

### 4.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

#### 4.2.1 பாதீட்டு முரண்கள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 12 செலவின விடயங்களுக்காக ரூபா 876,775,249 கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் மீளாய்வாண்டின் போது ரூபா 123,065,225 நிதியேற்பாடு சேமிக்கப்பட்டிருந்தது. அந்த சேமிப்பு செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 6 சதவீதம் முதல் 100 சதவீதம் வரையிலான அளவினைக் கொண்டிருந்தது.

(ஆ) மூலதன செலவின விடயமொன்றிற்கு நிதிப்பிரமாணம் 66 இன் படி நடவடிக்கை எடுத்து ஏனைய செலவின விடயங்களிலிருந்து ரூபா 57,800,000 நிதியேற்பாடு பெறப்பட்டிருந்தது. 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் அதில் ரூபா 40,700,276 தொகையான நிதியேற்பாடு பயன்படுத்தப்பட்டிருக்கவில்லை.

### 4.3 கட்டுநிதி மற்றும் பொது வைப்புக் கணக்குகள்

#### 4.3.1 கட்டுநிதிக் கணக்கு

1997 ஆம் ஆண்டு முதல் 2000 ஆம் ஆண்டு வரை நிதி அமைச்சினால் பொதுத் திறைசேரிக்கு தீர்ப்பதற்கு இருந்த ரூபா 555 மில்லியன் தொகையான கட்டுநிதி மீதி 2014 திசெம்பர் 31 ஆந் திகதியளவில் தீர்க்கப்பட்டிருந்தது.

#### 4.3.2 பொது வைப்புக்கள்

மீளாய்வாண்டின் போது ரூபா 6,840,012,753 தொகையான வைப்புக்கள் பெறப்பட்டிருந்ததுடன் அந்த வைப்புக்களை பதிவேட்டில் உள்ளடக்கும் போது தொகைகளின் சரியான தன்மையை உறுதிப்படுத்துவதற்காக பொறுப்பு வாய்ந்த உத்தியோகத்தர்களினால் சிற்றொப்பம் வைக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

22801 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறான இணக்கக் கூற்றுக்கள் தொடர்பாக பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) அரசாங்க உத்தியோகத்தர்களின் முற்பணக் கட்டுப்பாட்டுக் கணக்கில் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு மீதி ரூபா 774,769,742 ஆகவும் தனிப்பட்ட மீதி வகைப்படுத்தல் பொழிப்பின் கூட்டுத்தொகை ரூபா 762,701,413 ஆகவும் இருந்தமையால் ரூபா 12,068,329 தொகையான வேறுபாடு காணப்பட்டது.

(ஆ) இணக்கக் கூற்றில் குறிப்பிடப்பட்ட ஓய்வு பெற்றுச் சென்றுள்ள 91 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 7,288,226 கூட்டுத்தொகை தொடர்பாக தாபனவிதிக் கோவையின் XXIV ஆம் அத்தியாயத்தின் 4.2.4 மற்றும் 4.2.5 ஆம் பிரிவுகளில் குறிப்பிடப்பட்ட ஏற்பாடுகளின் படி திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

(இ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு சேவையை விட்டுச் சென்ற 85 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 3,913,582 கூட்டுத்தொகையான கடன் மீதி 06 மாதங்கள் முதல் 24 வருடங்கள் வரையிலான காலமாகக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(ஈ) 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையில் சேவையிலிருந்து அகற்றப்பட்ட 5 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 81,355 கூட்டுத் தொகையான கடன் மீதி மற்றும் வேலை நீக்கத்திற்குட்பட்ட 103 உத்தியோகத்தர்களிடமிருந்து அறவிட வேண்டிய ரூபா 7,922,328 கூட்டுத்தொகையான கடன் மீதி 06 மாதங்கள் முதல் 24 வருடங்கள் வரையிலான காலமாகக் கொண்டுவரப்பட்டிருந்த போதிலும் அந்தக் கடன் மீதியை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 4.5 சொத்துக்கள் முகாமைத்துவம்

திணைக்களத்திற்குச் சொந்தமான ரூபா 231,832,279 கூட்டுப் பெறுமதியான வாகனங்கள் தொடர்பாக வாகனப் பதிவேடு நாளது வரையாக்கப்பட்டிராமையால் வாகனங்களின் எண்ணிக்கையை உறுதிப்படுத்திக்கொள்ள முடியாதிருந்ததுடன் 2014

ஒக்தோபர் 17 ஆந் திகதிய 02/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச் சுற்றறிக்கையின் படி வாகன மெய்மையாய்வும் மேற்கொள்ளப்பட்டிருக்கவில்லை.

**4.6 இணங்காமைகள்**

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

அரசாங்க கொள்வனவு வழிகாட்டிக் கோவையின் 5.4.6(அ) வழிகாட்டியின் படி ஒப்பந்தக்காரருக்குச் செலுத்த வேண்டிய சகல கொடுப்பனவுகளிலும் குறித்த தொகையொன்று கொடுப்பனவு செய்யும் நிறுவனத்தினால் நிறுத்தி வைத்துக்கொள்ளப்பட வேண்டிய போதிலும், முன்னைய ஆண்டுகளில் ஆரம்பிக்கப்பட்டிருந்த 11 நிர்மாணங்களுக்காக ரூபா 4,210,702 கூட்டுத்தொகை நிறுத்தி வைக்கப்பட்டிருக்கவில்லை.

**4.7 உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் செயற்திட்டங்களை அமுல்படுத்தல்**

உள்நாட்டு நிதியீட்டத்தின் மூலம் அமுல்படுத்தப்பட்ட செயற்திட்டங்கள் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது பின்வரும் குறைபாடுகள் அவதானிக்கப்பட்டன.

**(அ) செயற்திட்டங்களை ஆரம்பிக்காது கைவிடல்.**

நிர்மாணங்கள் ஆரம்பிக்கப்படாத மூன்று ஒப்பந்தங்களுக்கு 2012 ஆம் ஆண்டின் போது ரூபா 2,393,741 தொகையான முற்பணம் செலுத்தப்பட்டிருந்த போதிலும் 2014 திசெம்பர் 31 ஆந் திகதியிலும் முற்பணத்தை அறவிடுவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**(ஆ) செயற்திட்டங்களைப் பூர்த்தி செய்யாது கைவிடல்**

திணைக்களத்தினால் ரூபா 54,198,439 கூட்டுத்தொகையான பின்வரும் செயற்திட்டங்கள் ஆரம்பிக்கப்பட்டிருந்த போதிலும் அந்த செயற்திட்டங்கள் பூர்த்தி செய்யாது கைவிடப்பட்டிருந்தன.

| செயற்திட்டத்தின் பெயர் | மதிப்பிடப்பட்ட கிரயம் | ஆரம்பிக்கப்பட்ட திகதி | 2014 திசெம்பர் 31 இல் நிதிச் செயலாற்றல் | கைவிடப்படாமைக்கான காரணம் |
| --- | --- | --- | --- | --- |
| தற்காலிக நீதவான் நீதிமன்றம் திருத்துதல் - ஏறாவூர் | 6,322,026 | 2011.11.21 | 1,276,800 | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| தற்காலிக நீதவான் நீதிமன்றம் திருத்துதல் - களுவாஞ்சிக்குடி | 6,888,325 | 2012.01.24 | 2,068,640 | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| மாவட்ட நீதவான் உத்தியோகபூர்வ இல்லம் திருத்துதல் - மாத்தறை | 3,273,948 | குறிப்பிடப்படவில்லை | 486,080 | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| மாவட்ட நீதவான் உத்தியோகபூர்வ இல்லம் திருத்துதல் - நொச்சியாகம | 13,636,145 | 2013.09.28 | 3,578,400 | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை |
| ஹங்குரன்கெத்த நீதவான் நீதிமன்றக் கட்டிட நிர்மாணம் | 4,372,430 | 1999.12.07 | 874,486 | அனுமதியற்ற குடியிருப்பாளர்களாக இருந்தமையால் வேலை ஆரம்பிப்பதற்கு முடியாமையாமையினால் ஒப்பந்தப் பெறுமதியை அதிகரிக்குமாறு 2000 பெப்ரவரி 28 ஆந் திகதி ஒப்பந்தக்காரரினால் கோரப்பட்ட வேண்டுகோளின் |

| | | | | |
|---|---|---|---|---|
| | | | | படி கொள்வனவுக் குழு புதிய உடன்படிக்கையில் கைச்சாத்திடுவதற்கு உத்தேசிக்கப்பட்டிருந்த போதும் ஒப்பந்தக்காரரினால் அது புறக்கணிக்கப்பட்டிருந்தது. |
| கல்கிஸ்ஸ நீதவான் நீதிமன்றக் கட்டிட நிர்மாணம் | 14,987,688 | 2004.09.04 | 2,395,801 | செயற்பாடுகள் நிறைவேற்றப்படாது இடையில் நிறுத்தப்பட்டிருந்தது |
| கணுவன நீதவான் நீதிமன்றக் கட்டிட நிர்மாணம் | 20,129,014 | 2010.08.06 | 4,098,999 | செயற்பாடுகள் நிறைவேற்றப்படாது இடையில் நிறுத்தப்பட்டிருந்தது |
| சட்ட உதவி மற்றும் சமூக விழிப்புணர்வுக் கட்டிட நிர்மாணம் - மாத்தளை | 4,690,877 | 2007.12.31 | 938,175 | செயற்பாடுகள் நிறைவேற்றப்படாது இடையில் நிறுத்தப்பட்டிருந்தது |

**(இ) பொறுப்புக்களைப் புறக்கணித்த ஒப்பந்தக்காரர்கள்**

-----------------------------------------------------------------------------------------

நிதிப்பிரமாணம் 705 மற்றும் 1977 யூன் 06 ஆந் திகதிய 835 ஆம் இலக்க திறைசேரிச் சுற்றிக்கையின் படி பொறுப்புக்களைப் புறக்கணித்த மேற்கூறப்பட்ட (அ) மற்றும் (ஆ) இல் குறிப்பிடப்பட்ட ஒப்பந்தக்காரர்கள் தொடர்பாக 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

**4.8 நட்டம் மற்றும் கைவிடல்கள் தொடர்பான கூற்று**

--------------------------------------------------------------------------------

மீளாய்வாண்டின் போது 66 சந்தர்ப்பங்களில் 55 வாகனங்கள் விபத்திற்குட்பட்டிருந்தன. அந்த விபத்துக்களால் ஏற்பட்ட நட்ட இழப்பிற்காக காப்புறுதி உரித்தாக ரூபா 7,309,520 தொகை கிடைத்திருந்தது. மீளாய்வாண்டின்

போது திணைக்களத்தின் சாரதிகள் போதியளவான கவனத்துடன் வாகனம் செலுத்தாமையினால் ஏற்பட்ட வாகன விபத்துக்களின் எண்ணிக்கை உயர் பெறுமதியைக் கொண்டிருந்தமை அவதானிக்கப்பட்டது.

## 4.9 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 25 | 15 | 10 |
| (ii) | மூன்றாம் நிலை | 26 | 6 | 20 |
| (iii) | இரண்டாம் நிலை | 1,008 | 615 | 393 |
| (iv) | ஆரம்ப நிலை | 3,570 | 2,959 | 611 |
| | **மொத்தம்** | **4,629** | **3,595** | **1,034** |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 1,034 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

# 5. தலைப்பு - 231 கடன் இணக்க சபை திணைக்களம்

## 5.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

அமைச்சினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|
| (i) நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| (ii) கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐ/ஏ/ஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |

## 5.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

### 5.2.1 பாதீட்டு முரண்கள்

14 செலவின விடயங்களுக்காக ரூபா 9,800,150 கூட்டுத்தொகையான மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையினால் நிதியேற்பாட்டைப் பயன்படுத்தியதன் பின்னர் சேமிப்பு ரூபா 1,945,037 அல்லது ஒதுக்கப்பட்ட நிதியேற்பாட்டில் 6.41 சதவீதம் முதல் 97.78 சதவீதம் வரையிலான அளவினைக் கொண்டிருந்தது.

## 5.3 இணங்காமைகள்

**சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை**

தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்ட சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாண ஏற்பாடுகளுக்கு இணங்காத சந்தர்ப்பங்கள் கீழே காண்பிக்கப்படுகின்றது.

2004 ஒக்தோபர் 18 ஆந் திகதிய 174 ஆம் இலக்க அரசாங்க கணக்குகள் சுற்றறிக்கைகளின்படி ரூபா 898,410 கூட்டுப்பெறுமதியான சொத்துக்கள் உரிய குறியீட்டின் படி வகைப்படுத்தப்பட்டு ஒதுக்கீட்டுக் கணக்கில் காண்பிக்கப்பட்டிருக்கவில்லை.

## 5.4 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 01 | 01 | - | - |
| (ii) | மூன்றாம் நிலை | 14 | 07 | 07 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 04 | 04 | - | - |
| (iv) | ஆரம்ப நிலை | - | 02 | - | 02 |
| | **மொத்தம்** | **19** | **14** | **07** | **02** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 07 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 6. தலைப்பு - 233 அரசாங்க பகுப்பாய்வாளர் திணைக்களம்

### 6.1 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) ஒரு செலவின விடயத்திற்காக ஒதுக்கப்பட்ட ரூபா 200,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 3 செலவின விடயங்களுக்காக ரூபா 256,828 மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 13 சதவீதம் முதல் 16 சதவீதம் வரையிலான அளவினைக் கொண்டிருந்தது.

## 6.2 சொத்துக்கள் முகாமைத்துவம்

**விளைவற்ற சொத்துக்கள்**

கீழே வகைப்படுத்தப்பட்டுள்ள பிரகாரம் சில சொத்துக்கள் விளைவற்றுக் காணப்பட்டமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனையின் போது அவதானிக்கப்பட்டன.

| | சொத்துக்களின் வகை | அலகுகளின் எண்ணிக்கை | பெறுமதி | விளைவற்றுக் காணப்பட்ட காலம் |
|---|---|---|---|---|
| | | | ரூபா | |
| (i) | கட்டிடங்கள் (உத்தியோகபூர்வ இல்லம்) | 2 | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2013 ஆம் ஆண்டு முதல் 2015 ஆகஸ்ட் மாதம் வரை |
| (ii) | சமயலறைப் பொருட்கள் (உத்தியோகபூர்வ இல்லம்) | - | 2,339,521 | -மேற்படி- |
| (iii) | மர அலுமாரி | 17 | கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை | 2012 ஆம் ஆண்டு முதல் 2015 ஆகஸ்ட் மாதம் வரை |

## 6.3 செயலாற்றல்

2014 ஆம் ஆண்டின் செயல்நடவடிக்கைத் திட்டத்தின்படி அரசாங்க இரசாயன பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் செயல்முன்னேற்றம் தொடர்பான அவதானிப்புக்கள் கீழே காண்பிக்கப்படுகின்றன.

**போதியளவில் நிறைவேற்றப்படாத பிரதான பணிகள்**

2014 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு ஒவ்வொரு பிரிவிலிருந்தும் பூர்த்தியடையாமல் முன்கொண்டுவரப்பட்ட 4,291 பரிசோதனைகள் காணப்பட்டதுடன் அதில் நீதிமன்ற விஞ்ஞான நஞ்சியல் பிரிவிலும் நீதிமன்ற போதையியல் பிரிவிலும் பரிசோதனைகள் முறையே 1,302 மற்றும் 1,196 ஆகக் காணப்பட்டன.

## 6.4 முகாமைத்துவ நலிவுகள்

2014 ஆம் ஆண்டின் பொருள் மெய்மையாய்வு அறிக்கையின்படி அழிவடையச் செய்யக்கூடிய 307 புத்தகங்கள், பாதுகாக்கப்பட வேண்டிய 1,629 புத்தகங்கள், கட்டப்பட வேண்டிய 343 புத்தகங்கள் மற்றும் காலாவதியான 431 புத்தகங்கள் என்பன இனங்காணப்பட்டிருந்ததுடன் அதற்காக எவ்வித நடவடிக்கைகளும் கணக்காய்வுத் திகதியான 2015 மே 15 ஆந் திகதி வரையிலும் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 6.5 மனித வள முகாமைத்துவம்

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 90 | 73 | 17 |
| (ii) | மூன்றாம் நிலை | 10 | 02 | 8 |
| (iii) | இரண்டாம் நிலை | 119 | 77 | 42 |
| (iv) | ஏனையோர் (அமைய/ தற்காலிக/ ஒப்பந்த அடிப்படை) | 79 | 51 | 28 |
| | மொத்தம் | 298 | 203 | 95 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 95 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் நடவடிக்கை எடுத்திருக்கவில்லை.

## 7. தலைப்பு 234 - உயர் நீதிமன்ற பதிவாளர்

### 7.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | **பதிவேட்டு வகை** | **உரிய பிரமாணம்** |
|---|---|---|
| (அ) | நிலையான சொத்துப் பதிவேடு | 1978 திசெம்பர் 19 ஆந் திகதிய 842 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| (ஆ) | கணனி, உப பாகங்கள் மற்றும் மென்பொருள் தொடர்பான நிலையான சொத்துப் பதிவேடு | 2002 நவம்பர் 28 ஆந் திகதிய ஐ/ஏ/ஐ/2002/02 ஆம் இலக்க திறைசேரி சுற்றுநிருபம் |
| (இ) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |
| (ஈ) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |

### 7.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) 05 செலவின விடயங்களுக்காக ஒதுக்கப்பட்ட ரூபா 2,400,000 தொகையான மொத்தத் தேறிய ஏற்பாடும் சேமிக்கப்பட்டிருந்தது.

(ஆ) 07 செலவின விடயங்களுக்காக ரூபா 4,589,008 மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 28 சதவீதம் முதல் 98 சதவீதம் வரையிலான அளவினைக் கொண்டிருந்தது.

## 7.3 பொது வைப்புக் கணக்கு

02 வருடங்களையும் 05 வருடங்களையும் விஞ்சிய முறையே ரூபா 9,251,782 மற்றும் ரூபா 34,963,472 கூட்டுத்தொகையான வைப்பு மீதிகள் தொடர்பாக நிதிப்பிரமாணம் 571 இன் படி நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.4 அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்கு

2013 திசெம்பர் 31 ஆந் திகதியில் உள்ளவாறு 23401 ஆம் இலக்க அரசாங்க உத்தியோகத்தர்களுக்கான முற்பணக் கணக்குகள் தொடர்பாக இணக்கக் கூற்றின்படி கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்கும் திறைசேரிப் புத்தகங்களின் படியான கட்டுப்பாட்டுக் கணக்கு மீதிக்குமிடையே ரூபா 68,245 தொகையான வேறுபாடொன்று காணப்பட்டதுடன் இந்த வேறுபாடு மீளாய்வாண்டின் இறுதிவரையிலும் சரிசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 7.5 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

### வருடாந்த கொள்வனவுத் திட்டம்

2006 மார்ச் 24 ஆந் திகதிய 128 ஆம் இலக்க தேசிய பாதீட்டுச் சுற்றறிக்கையின்படி 2014 ஆம் ஆண்டின் கொள்வனவுத் திட்டம் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

## 7.6 மனித வள முகாமைத்துவம்

### அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியினரும்

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை | மிகையான எண்ணிக்கை |
|---|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 05 | 04 | 01 | - |
| (ii) | மூன்றாம் மற்றும் இரண்டாம் நிலைகள் | 101 | 62 | 39 | - |
| (iii) | ஆரம்ப நிலை | 74 | 78 | - | 04 |
| (iv) | ஏனைய (ஒப்பந்த அடிப்படை) | - | 01 | - | 01 |
| | **மொத்தம்** | **180** | **145** | **40** | **05** |

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 40 வெற்றிடங்கள் பூர்த்திசெய்யப்படாதிருந்ததுடன் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கையை விஞ்சி 05 பேர் சேர்க்கப்பட்டிருந்தனர்.

(ஆ) மூன்றாம் மற்றும் இரண்டாம் நிலைகளில் அங்கீகரிக்கப்பட்ட ஊழியர் எண்ணிக்கை தனித்தனியாக வகைப்படுத்தப்பட்டிருக்கவில்லை.

## 8. தலைப்பு 235 - சட்ட ஆணைக்குழு திணைக்களம்

### 8.1 பதிவேடுகள் மற்றும் புத்தகங்கள் பேணப்படாமை

திணைக்களத்தினால் கீழே காண்பிக்கப்படுகின்ற பதிவேடுகள் பேணப்படாதிருந்தமை தெரிவுக் கணக்காய்வுப் பரிசோதனைகளின் போது அவதானிக்கப்பட்டது.

| | பதிவேட்டு வகை | உரிய பிரமாணம் |
|---|---|---|
| (i) | பொறுப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 214 |
| (ii) | இழப்புக்கள் தொடர்பான பதிவேடு | நிதிப்பிரமாணம் 110 |

### 8.2 ஒதுக்கீட்டுக் கணக்கு

**பாதீட்டு முரண்கள்**

09 செலவின விடயங்களுக்காக ரூபா 3,248,700 மிகை நிதியேற்பாடு ஒதுக்கப்பட்டமையின் காரணமாக நிதியேற்பாட்டைப் பயன்படுத்திய பின்னர் சேமிப்பு அந்த செலவின விடயங்களுக்குரிய தேறிய நிதியேற்பாட்டில் 29 சதவீதம் முதல் 93 சதவீதம் வரையிலான அளவினைக் கொண்டிருந்தது.

### 8.3 நல்லாளுகையும் கணக்களிப்பொறுப்பும்

#### 8.3.1 வருடாந்த செயல்நடவடிக்கைத் திட்டம்

2014 பெப்ரவரி 17 ஆந் திகதிய 01/2014 ஆம் இலக்க அரசாங்க நிதிச்சுற்றறிக்கையின் ஏற்பாடுகளின்படி திணைக்களத்தினால் செயல்நடவடிக்கைத் திட்டம் தயாரிக்கப்பட்டிருக்கவில்லை.

**8.3.2 உள்ளகக் கணக்காய்வு**

திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவொன்று தாபிக்கப்படாதிருந்ததுடன் நீதி அமைச்சின் உள்ளகக் கணக்காய்வுப் பிரிவின் மூலம் திணைக்களத்தில் உள்ளகக் கணக்காய்வு நடவடிக்கைகள் மேற்கொண்டு 2014 ஆம் ஆண்டின் போது 01 உள்ளகக் கணக்காய்வு ஐய வினா வழங்கப்பட்டிருந்தது.

**8.4 செயலாற்றல்**

கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்பட்ட மீளாய்வாண்டின் செயலாற்றல் அறிக்கையின் படி சட்டரீதியாக கற்பழிப்புகள் தொடர்பாக தண்டணை வழங்கும் நடவடிக்கை தொடர்பான உத்தேச திருத்தங்களின் வரைவு தயாரிக்கும் நடவடிக்கைகள் 2014 யூலை 02 ஆந் திகதி பூர்த்தி செய்யப்பட்டிருந்தது. அந்த திட்டத்தின்படி 17 நிகழ்ச்சித்திட்டங்களின் நடவடிக்கைகள் நிறைவேற்றப்பட வேண்டியிருந்த போதிலும் அந்த நடவடிக்கைகள் 2014 திசெம்பர் 31 ஆந் திகதி வரையிலும் ஆரம்பிக்கப்பட்டிருக்கவில்லை.

**8.5 மனித வள முகாமைத்துவம்**

**அங்கீகரிக்கப்பட்ட எண்ணிக்கையும் உள்ளபடியான பதவியணியினரும்**

2014 திசெம்பர் 31 இல் உள்ளவாறான பதவியணியினர் தொடர்பான நிலை பின்வருமாறாகும்.

| | ஊழியர் வகை | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினர் எண்ணிக்கை | உள்ளபடியான பதவியணியினர் எண்ணிக்கை | வெற்றிடங்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| (i) | சிரேஷ்ட நிலை | 06 | 02 | 04 |
| (ii) | மூன்றாம் நிலை | 01 | 01 | - |
| (iii) | இரண்டாம் நிலை | 15 | 04 | 11 |
| (iv) | ஆரம்ப நிலை | 07 | 06 | 01 |
| | மொத்தம் | 29 | 13 | 16 |

பின்வரும் அவதானிப்புக்கள் மேற்கொள்ளப்படுகின்றன.

(அ) மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் 16 வெற்றிடங்களை நிரப்புவதற்கு திணைக்களம் தவறியிருந்தது.

(ஆ) மாதாந்தம் ரூபா 35,472 சம்பளம் பெறுகின்ற பெண் முகாமைத்துவ உதவியாளர் பட்டதாரி உத்தியோகத்தரொருவர் 04 வருட காலம் முதல் எவ்வித கடமைகளும் கையளிக்கப்படாமல் திணைக்களத்தின் பதவியணியில் இருந்தமை கணக்காய்வில் வெளிப்படுத்தப்பட்டது.